**கவனிக்க.**-*2020.01.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2158 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

*2158 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 2 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 4 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்த சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்த சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, சனவரி 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 17ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1-B81596-353 (2020/01)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிஸ்கால் ஏல விற்பனை அறிவித்தல்
## கண்டி மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: DMB/16/15
(கொழும்பு மாவட்ட நீதிமன்ற)
பெறுமதி: ரூ. 7,762,257.01
அஸ்கீசி இலக்கம்: 17/19
(கண்டி மாவட்ட நீதிமன்றம்)

டீ. கே. எஸ். பைனான்ஸ் லிமிட்டட்
இலக்கம்: 245, தர்மபால மாவத்த,
கொழும்பு 07.
(கம்பனியின் புதிய இலக்கம் P. B. 3793)

வாதி

எதிராக

1. ஹலம்ப ஆரச்சிகே ஜயது பியசிறி
இலக்கம் 04, தேவி வீதி,
வட்டபுலுவ,
கண்டி.
2. தோன அருணி சுஜீவா லியனபத்திரன
இலக்கம் 04, தேவி வீதி,
வட்டபுலுவ,
கண்டி.

பிரதிவாதிகள்

மேற்படி இலக்கமுடைய வழக்கு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வருடத்தின் 2016.06.14 ஆந் திகதிய கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு அறிவிப்புக்கு ஏற்ப 1 ஆவது மற்றும் 2 ஆவது பிரதிவாதிகளிமிருந்து ரூ. 7,762,257.01 பணம் பேரில் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து முழுமையான பணத்தொகையும் செலுத்தி முடிக்கும் வரை அந்த முழுத்தொகைக்காக நாளாந்த வட்டி நடைமுறைக் கட்டணங்கள் மற்றும் வழக்கு கட்டணங்களும் செலுத்தும்படி கட்டளையிடப்பட்டுள்ளதுடன் மேலே குறிப்பிடப்பட்ட 1 ஆவது மற்றும் 2ஆவது பிரதிவாதிகளுக்கு உரித்தாக உள்ள கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர் கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துகள் தடைசெய்து எடுக்கப்பட்டு அவற்றை விற்பனை செய்து அந்தத் தொகையை அறவிடும்படி கட்டளையிட்டு தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளதால்,

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு R. L. V. டி சில்வாவால் உறுதிப்படுத்தப்பட்ட 2013.07.02 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1177 உடைய ஈட்டுமுறியை அடிப்படையாகக் கொன்டு மேலே கூறப்பட்ட ரூ. 7,762,257.01 பணத்தின் பேரில் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து முழுமையான தொகையும் செலுத்தி முடிக்கும் வரையான முழுமையான பணமுன் அதற்கான நாளாந்த வட்டி நடைமுறை கட்டணங்கள் மற்றும் வழக்கு கட்டணங்களும் செலுத்தும்படி 1ஆவது மற்றும் 2 ஆவது பிரதிவாதிகளுக்கு கட்டளையிடப்பட்டுள்ளதால் அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு 1ஆவது மற்றும் 2ஆவது பிரதிவாதிகள் இயலாமலோ மற்றும் அல்லது கைவிட்டு உள்ளதால் DMB16/2015 கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு அறிவிப்புக்கு ஏற்ப கண்டி மாவட்டத்தின் பதிவாளர்/பிரதி பிஸ்கால் ஆகிய என்னிடத்தில் வழங்கப்பட்ட விற்பனை அதிகாரப்பத்திரத்தின் கீழ் கீழேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட அசையும் சொத்துக்களை 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு குறித்த விற்பனை அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிட்டவாறு முன்னர் அரசாங்க வர்த்தமானி மற்றும் செய்திப் பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டு செய்தி அறிவிப்புகள் வழங்கப்பட்ட பின்னர் சொத்துகள் அமைந்துள்ள நிலையங்களில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு என்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர கங்கவட்ட கோரளையில் கண்டி மாநகர சபையின் எல்லைக்குள் கண்டி பிரதேச செயலாளர் பிரிவில் வட்டபுலுல மேற்கு இலக்கம் 229 கிராம அலுவலர் பிரிவில் வட்டபுலுவ கிராமத்தில் அமைந்துள்ள கல்கடுவ வத்த அல்லது கல்லிந்தவத்த, பிட்டகந்த வத்த, பிட்டகந்த என்ற பெயருள்ள காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K. W. M. விக்டர் மாபிட்டகமவால் 2012.12.16 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 684 உடைய நிலஅளவைத் திட்டத்தில் காணித்துண்டு 1 எனக் காட்டப்பட்டதும் எல்லைகளாக - வடக்கு: நடைபாதையாகிய தர்மாசோக மாவத்தவும் ; மேற்கு : தேவி வீதியும் (பொதுவாக பறன கங்தொட்ட வீதி என அறியப்பட்டது) உடையது கூறப்பட்ட இலக்கம் 684 நிலஅளவைத் திட்டத்துக்கு ஏற்ப பரப்பளவில் பத்தொன்பது தசம் ஒன்று மூன்று (பேர்ச் 19.13) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு எட்டு நான்கு ஹெக்டெயார் உடையது. இது கண்டி காணிப் பதிவு அலுவலகத்தில் இலக்கம் A 467/16 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அனைத்துப் பொருட்களையும் கொண்டது.*

*இலக்கம் 01 காணித்துண்டுக்கான எல்லைகள் -*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 02ஐயும்;*

*கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 04ஐயும்;*

*தெற்கு : கல்கடுவ சந்தியிலிருந்து அறுப்ப பலவுக்கு பயணம் செய்யும் தர்மாசோக மாவத்தவையும்;*

*மேற்கு : தேவி வீதியையும் (பொதுவாக பறணகங்தொட்ட வீதி என அறியப்பட்டது).*

**மேலே குறிப்பிட்ட ஆதனத்தக்கு பிரவேசிக்கும் வழி.-**

*கண்டியிலிருந்து புறப்பட்டு கட்டுகஸ்தோட்ட வீதி வழியாக 1 1/2 கிலோமீற்றர் பயணம் செய்து பின்னர் மஹய்யாவ சந்தியை அடைந்து அங்கிருந்து அறுப்பல வீதியில் 600 மீற்றர் சென்று பின்னர் கல்கடுவ சந்தியில் இடதுபக்கம் அமைந்துள்ள இந்த ஆதனத்தை வந்தடையலாம்.*

**கொடுப்பனவு செய்யும் முறை**: *-மேலே குறிப்பிட்ட ஏல விற்பனையின் முடிவில் தெரிந்தெடுக்கப்பட்ட கொள்வனவாளரால் ஏல விற்பனை முடிந்தவுடன் அந்த சந்தர்ப்பத்திலேயே கீழே குறிப்பிடப்பட்ட பணத்தை பதிவாளர்/பிரதி பிஸ்காலுக்கு பணமாகக் கொடுக்க வேண்டும்.*

*1. கேள்வி விலையின் 25 %;*

*2. கேள்வி விலையின் முதல் 7500.00 ரூபாவுக்காக ரூபா 150.00 தொகையும் அதற்கு மேலாக ஒவ்வொரு ரூபா 1000.00 தொகைக்கும் ரூ. 5.00 வீதமும் ஏலக் கட்டணம் செலுத்த வேண்டும்;*

*3. ஏல விற்பனைக்கு ஏற்பட்ட அனைத்து செலவுகளையும் கேள்வி விலையின் மீதியாகிய 75 % பணத்தையும் ஏல விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் அஸ்கீசி இலக்கம் 17/2019 இன் கீழ் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DMB 16/2015 வழக்கு பேரில் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பு செய்ய வேண்டும்.*

*4. நீதிமன்றம் மூலம் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கொள்வனவாளரால் அவருடைய பணத்தில் முத்திரைக் கட்டணம் செலுத்தி பிஸ்கால் ஒப்புப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிமை மற்றும் உறுதிப்பத்திரங்கள் சோதனையிடுவதற்காக இலக்கம் 245, தர்மபால மாவத்தை, கொழும்பு 07 எனும் நிலையத்தில் அமைந்துள்ள ரீ. கே. எஸ். பைனான்ஸ் லிமிடட்டில் கொடுப்பனவு முகாமையாளரை 011 4799999 அல்லது 076 8271151 ஆகிய தொலைபேசி இலக்கம் மூலம் அழைக்கவும்.*

*நீதிமன்றத்தின் கட்டளைப்படி,*

*பதிவாளர்/பிரதி பிஸ்கால்.*

*மாவட்ட நீதிமன்றம், கண்டி,*
*2019, திசெம்பர் 19.*

*01-407*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் இயங்கும் மேல் மாகாண வணிக மேல் நீதிமன்றத்தில் (சிவில் நியாயாதிகத்தை நடைமுறைப்படுத்தும்)

2007 ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழான விண்ணப்பமொன்றின் விடயத்தில்

1. சாந்த றுவன் குமார லியனகே
இல: 221/1/M,
சுப்பிறீம் ரெறாஸ்,
குறுகுலாவ, றாகம.

வழக்கு இல:
CHC/80/2019/
CO

மனுதாரர்

ஸ்மாட் லொஜிஸ்ரிக்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
F 10 முதலாம் மாடி,
திலக்மா சிட்டி இல. 588,
நீர்கொழும்பு வீதி,
மஹபாகே.

ஒடுக்கப்படவுள்ள கம்பனி

மேற்குறிப்பிட்ட மனுதாரர் சார்பில் சட்டத்தரணி வருணி குமாரபேலி அவர்களால் 2019, நவெம்பர் 1 ஆந் திகதி கொழும்பில் இயங்கும் மேல் மாகாண வணிக மேல் நீதிமன்றத்தில் (சிவில் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும்) மேற் பெயர் குறிப்பிட்ட கம்பனியை ஒடுக்கும் மனுவுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டது. குறித்த மனு 2020, சனவரி 29 ஆந் திகதி மன்றில் விசாரிக்கப்படும். குறித்த மனு மீது கட்டளை பிறப்பிப்பதற்கு யாரேனும் கடன் கொடுத்தவர் அல்லது குறித்த கம்பனிக்கு உடனுதவி வழங்கியோர் ஆதரவு அல்லது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பின் அதற்கான விசாரணை நடைபெறும் தருணத்தில் தானாக அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோன்றலாம். கடன் கொடுத்தவர் அல்லது குறித்த கம்பனிக்கு உடனுதவி வழங்கியோருக்கு குறித்த மனுவின் பிரதி தேவைப்படின் கீழே கையொப்பமிட்டவரிடம் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி அதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

வருணி குமாரபேலி,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 15, பெல்மண்ட் வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**:- குறித்த மனு விசாரணையின்போது சமுகமளிக்க விரும்பும் நபர் தனது விருப்பத்தை தெரிவிக்கும் எழுத்துமூல அறிவித்தலொன்றை தபால் மூலம் சட்டத்தரணி வருணி குமாரபேலிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அவருக்கு சேர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் நபரின் பெயர் மற்றும் விலாசம் அல்லது கம்பனியாயிருப்பின் கம்பனியின் பெயர், விலாசம் ஆகியனவற்றை குறிப்பிட்டு கம்பனியால் அல்லது நபரால் அல்லது அவரது சட்டத்தரணியால் (இருப்பின்) கைச்சாத்திடப்பட்டு 2020, சனவரி 28 ஆந் திகதி 6 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக நேரகாலத்துடன் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

01-410

## மனு பற்றிய அறிவித்தல்

### கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமனற்த்தில்

ஹோகந்தர, ஹோகந்தர தெற்கு, இல. 69/1
இல் தலைமை காரியாலயம் அமைந்துள்ள
இஸாரா என்ஜினியரிங்
என்ட் லொறி பொடி (பிரைவேட்) லிமிட்டட்
ஒடுக்கப்படும் விடயத்தில்

வழக்கு இல:
HC/ Civil/ 58/
2019/CO

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க,
கம்பனிகள் சட்டத்தின் 270 (அ) மற்றும்/அல்லது
(இ) மற்றும்/அல்லது (ஈ) ஆகிய
அத்தியாயத்தின்
கீழ் இஸாரா என்ஜினியரிங் என்ட் லொறிபொடி
(பிரைவேட்) லிமிட்டட் கலைத்தல் சம்பந்தமாக
272 (1) அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும்
வேண்டுகோள்

இஸாரா என்ஜினியரிங் என்ட் லொறி பொடி
(பிரைவேட்) லிமிட்டட்
இல. 69/1, ஹோகந்தர தெற்கு,
ஹோகந்தர.

மனுதாரர்

கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தின் மேலே பெயர் குறிப்பிட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று 2019, யூலை 25 ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்டதென்றும், மனுதாரர் சார்பாக சட்டத்தரணி திருமதி எஸ். என் ராஜபக்ஸ அவர்களால் முன்வைக்கப்பட்ட 2020, சனவரி 14 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட மனு மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியில் எவரேனும் கடன்கொடுனர் அல்லது உதவு தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகலோ அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோனி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம். அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்தவப்படும்.

சட்டத்தரணி திருமதி எஸ். என். ராஜபக்ஸ,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 700/120, பெரேரா மாவத்தை,
தலவத்துகொடை.

**குறிப்பு**:- சொல்லப்பட்ட மனுவின் கேட்பின் போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள் அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணியான திருமதி எஸ். என். ராஜபக்ஸ என்பவருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறவேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட அற்றோனிகளால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2020, சனவரி 13 ஆம் நாளன்று பி. ப. 6.00 மணிக்கும் பிந்தமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது அஞ்சலிலிடப்படின் அந்நேரத்திற்கு முன்னர் அவரைச் சென்றடையக்கூடிய வகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

01-486

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.